பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
07 01 2025 **TUESDAY** 12 40 **PM**
ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- சர்வதேச அளவிலான காவல்துறை தகவல்களை ஒருங்கிணைக்க வகைசெய்யும் **‘Bharathpol’** இணையதளத்தை மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இன்று தொடங்கி வைத்தார்.
- **HMPV** தொற்று தடுப்பு நடவடிக்கைகள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வை அதிகரிக்குமாறு மாநில அரசுகளை, மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.
- **UGC - NET** தேர்வு தேதிகளை மாற்றியமைக்க வேண்டும் என்று முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.
- திபெத்தில் ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தில் 53 பேர் உயிரிழந்தனர்.
- பிரிட்டீஷ் ஜூனியர் ஓப்பன் ஸ்குவாஷ் போட்டியில், இந்தியாவின் **Anahat Singh** பட்டம் வென்றார்.

**>>>>>>><<<<<<<<<**

**‘Bharathpol’** இணையதளம் சர்வதேச அளவிலான விசாரணைகளை புதிய சகாப்தத்திற்கு அழைத்துச் செல்லும் என மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

சர்வதேச அளவிலான காவல்துறை தகவல்களை ஒருங்கிணைக்க வகைசெய்யும் **‘Bharathpol’** இணையதளத்தை அவர் இன்று புதுதில்லியில் தொடங்கி வைத்து பேசினார்.

**CBI** உருவாக்கியுள்ள இந்த இணையதளம் இண்டர்போல் அமைப்பின் வாயிலாக, சர்வதேச ஒத்துழைப்பை நாடுவதற்கான அனைத்து வேண்டுகோள்களையும் முறைப்படுத்தும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் சிபிஐ அமைப்பில் சிறப்பாக பணியாற்றிய 35 அதிகாரிகளுக்கான குடியரசுத் தலைவரின் காவலர் பதக்கங்களையும் திரு. அமித் ஷா வழங்கினார்.

>>>>>>>><<<<<<<<<<

**HMPV** தொற்று தடுப்பு நடவடிக்கைகள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வை அதிகரிக்குமாறு மாநில அரசுகளை, மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

இந்த தொற்றுப் பரவல் குறித்து அனைத்து மாநில சுகாதாரத்துறை செயலாளர்கள் மற்றும் மருத்துவ வல்லுநர்களுடன் மத்திய சுகாதாரத்துறை செயலாளர் திருமதி. **Punya Salila Srivastava** காணொலி வாயிலாக ஆலோசனை நடத்தினார்.

இந்தக் கூட்டத்தில் பேசிய அவர், ஒருங்கிணைந்த நோய் கண்காணிப்பு திட்ட தரவுகளின் படி, நாட்டின் எந்தப் பகுதியிலும் தொற்று பரவல் வழக்கத்தை விட அதிகமாக இல்லை என்று கூறப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டினார்.

எனவே, மக்கள் அச்சமடையத் தேவையில்லை என்று குறிப்பிட்ட அவர், இத்தகைய தொற்று 2001ஆம் ஆண்டிலேயே கண்டறியப்பட்டதாகவும் கூறினார்.

அதேவேளையில், **Influenza** போன்ற பாதிப்புகள் மற்றும் கடுமையான மூச்சுத் திணறல் பாதிப்பு குறித்த கண்காணிப்பு நடவடிக்கைகளை அதிகரிக்குமாறும் மத்திய சுகாதாரத்துறை செயலாளர் கேட்டுக் கொண்டார்.

குளிர் காலத்தில் மூச்சுத் திணறல் பாதிப்புகள் அதிகரிக்கும் என்றாலும், எத்தகையை நிலைமையையும் சமாளிக்க நாடு தயாராக இருப்பதாகவும் திருமதி. **Punya Salila Srivastava** தெரிவித்தார்.

இதனிடையே, சென்னை தலைமைச்செயலகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன், மத்திய அரசின் அறிவுறுத்தலை அடுத்து தமிழகத்தில் கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

>>>>>>><<<<<<<<<

தில்லி சட்டப்பேரவை தேர்தல் தேதி இன்று அறிவிக்கப்படுகிறது.

பிற்பகல் 2 மணிக்கு தில்லி விக்யான் பவனில் நடைபெறும் செய்தியாளர் சந்திப்பில் தலைமைத் தேர்தல் ஆணையர் திரு. ராஜீவ்குமார் தேர்தல் அட்டவணையை வெளியிடவுள்ளார்.

70 உறுப்பினர்களைக் கொண்ட தில்லி சட்டப்பேரவையின் பதவிக்காலம் அடுத்த மாதம் 23ஆம் தேதி முடிவடையவுள்ள நிலையில், தேர்தல் தேதி அறிவிக்கப்படவுள்ளது.

>>>>>>><<<<<<<<<

அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கான சமூக பாதுகாப்பை விரிவுபடுத்துதல் மற்றும் முறைப்படுத்துதலில் எழும் சவால்கள் குறித்த இரண்டு நாள் சர்வதேச கருத்தரங்கை இந்தியா நடத்தவுள்ளது.

இந்த கருத்தரங்கு இம்மாதம் 20 மற்றும் 21ஆம் தேதிகளில் புதுதில்லியில் உள்ள **Yasho Bhoomi** சர்வதேச மாநாட்டு அரங்கில் நடைபெறவுள்ளது.

மத்திய தொழிலாளர் நலத்துறை, தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம் மற்றும் சர்வதேச சமூக பாதுகாப்பு அமைப்புடன் இணைந்து இந்த கருத்தரங்கிற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதில் ஆசிய – பசிபிக் பிராந்தியதிதில் உள்ள 31 நாடுகளைச் சேர்ந்த 40 சமூக பாதுகாப்பு அமைப்புகளின் வல்லுநர்கள் பங்கேற்கவுள்ளனர்.

>>>>>>><<<<<<<<<

**UGC - NET** தேர்வு தேதிகளை மாற்றியமைக்க வேண்டும் என முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக, மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதானுக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில், தமிழ்நாட்டின் முக்கிய விழாவான பொங்கல் பண்டிகை வரும் 13ஆம் தேதி முதல் 16ஆம் தேதிவரை கொண்டாடப்படவிருப்பதை சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே 13ஆம் தேதி முதல் 16ஆம் தேதிவரை நடத்துவதாக அறிவிக்கப்பட்டுள்ள யுஜிசி, நெட் மற்றும் பிற தேர்வுகளை வேறு நாட்களுக்கு மாற்றியமைக்குமாறு முதலமைச்சர் அக்கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

**>>>>>>><<<<<<<<<**

திபெத்தில் இன்று ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 53 பேர் உயிரிழந்தனர், 62 பேர் காயமடைந்தனர்.

அந்நாட்டின் **Xigaze** நகரில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 6 புள்ளி எட்டாக பதிவாகியுள்ளது.

நேபாளத்திலும் 7 புள்ளி ஒன்று ரிக்டர் அளவிற்கு சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. எனினும், சேத விவரங்கள் குறித்த தகவல் ஏதும் இல்லை.

பங்களாதேஷில் 4 புள்ளி ஒன்பது ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டது. இதன் தாக்கம் பீகார், மேற்குவங்கம் மற்றும் தில்லியிலும் உணரப்பட்டது.

**>>>>>>><<<<<<<<<**

தமிழை செம்மொழியாக அறிவித்த வரலாற்றுச் சாதனையாளர் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் என்று முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் புகழாரம் சூட்டியுள்ளார்.

சென்னையில் இன்று நடைபெற்ற மன்மோகன் சிங், ஈவிகேஎஸ். இளங்கோவன் நினைவேந்தல் கூட்டத்தில் பேசிய அவர், மன்மோகன் சிங் ஆட்சிக்காலத்தில் தமிழகத்தில் எண்ணற்ற வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டதாக தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - மு.க.ஸ்டாலின் 47 செகண்ட்ஸ்)

அதேபோன்று, எந்தப் பதவியில் இருந்தாலும் அதில் முத்திரை பதித்தவர் மறைந்த ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் என்றும் முதலமைச்சர் தெரிவித்தார்.

>>>>>>><<<<<<<<<

நீலகிரி மாவட்டம், உதகை மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில் காணப்படும் உறைபனி காரணமாக, கடும் குளிர் நிலவுகிறது.

இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதாக எமது செயதியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - சரவணன் 38 செகண்ட்ஸ்)

>>>>>>><<<<<<<<<

அஸ்ஸாமில் நிலக்கரி சுரங்கத்தில் சிக்கியுள்ளவர்களை மீட்கும் பணியில் ராணுவம் களமிறங்கியுள்ளது.

அஸ்ஸாம் - மேகாலயா எல்லையை ஒட்டிய **Tin Kilo** சுரங்கத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில், அங்கு பணியாற்றிக் கொண்டிருந்த தொழிலாளர்கள் 10க்கும் மேற்பட்டோர் சிக்கியுள்ளனர்.

இவர்களை மீட்கும் பணியில் தேசிய மற்றும் மாநில பேரிடர் மீட்புப் படையினர் நேற்று முதல் ஈடுபட்டு வரும் நிலையில், ராணுவம் மற்றும் கடற்படையைச் சேர்ந்த குழுவினரும் இன்று மீட்புப் பணியில் இணைந்துள்ளனர்.

கடற்படையின் நீர்மூழ்கி வீரர்கள் மற்றும் ராணுவத்தின் பொறியியல் வல்லுநர்கள், மருத்துவக் குழுவினரும் ஒருங்கிணைந்து இப்பணியில் ஈடுபட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>>><<<<<<<<<

கடற்படையின் ஆயுதங்கள் மற்றும் ஏவுகணையை எடுத்துச் செல்லும் எட்டாவது **ACTCM** படகு, கடற்படை சேவையில் இணைக்கப்பட்டுள்ளது.

மும்பையில் உள்ள கடற்படை கப்பல் கட்டும் தளத்தில் நடைபெற்ற இதற்கான நிகழ்ச்சியில், கமோடர் வினெய் வெங்கட்ராம் சிறப்பு விருந்தினராக பங்கேற்றார்.

இந்தப் படகு, கடலில் நிறுத்தப்பட்டுள்ள கடற்படை கப்பல்களுக்கு ஆயுதங்கள் உள்ளிட்ட பொருட்களை கொண்டு சேர்க்கும் பணியை மேற்கொள்ளும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<<<<

பிரிட்டிஷ் ஜூனியர் ஓப்பன் ஸ்குவாஷ் போட்டியில், இந்தியாவின் **Anahat Singh** பட்டம் வென்றார்.

இங்கிலாந்தில் நடைபெற்ற இப்போட்டியின் 17 வயதுக்கு உட்பட்டோருக்கான இறுதியாட்டத்தில் அவர், 4-11, 11-9, 6-11, 11-5, 11-3 என்ற செட்கணக்கில் எகிப்தின் **Malika El Karaksy**–யை வென்றார்.

>>>>>>><<<<<<<<<

மலேசிய ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Treesa Jolly** – காயத்ரி கோபிசந்த் இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை 21-10, 21-10 என்ற செட்கணக்கில் தாய்லாந்தின் **Omnicha - Sukitta** இணையை வென்றது.

>>>>>>><<<<<<<<<

18 வயதுக்குட்பட்டோருக்கான ஜூனியர் **Handball** சாம்பியன் போட்டியில், இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

லக்னோவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா - கஜகஸ்தானை 31-27 என்ற புள்ளிக்கணக்கில் வென்றது.

>>>>>>><<<<<<<<<

போபாலில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் ஆதிராஜ் தாக்கூர், விஷ்ணுவர்தன், சிராக் துஹான், சாய் கார்த்திக், தேவ் ஜாவ்யா ஆகியோர் பங்கேற்கின்றனர்.

>>>>>>><<<<<<<